**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE, TIRUVANNAMALAI.**

**O.S. No. 96/2019 DW1**

21.01.2026 **பி.வா.சா.1 செந்தில்குமார் சத்திய வாக்குமூலத்தின் பேரில் 3ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை -**

வாதி தரப்பில் மின்சார வாரியத்திற்கு எதிராக மட்டுமே இழப்பீடு கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். என்னுடைய நிருபண வாக்குமூலத்தில் மின் இணைப்பானது காவேரி என்பவர் பெயரில் இருப்பதாக சொல்லியுள்ளேன். என்னுடைய பதிலுரையில் 4ம் பத்தியில் மின் இணைப்பானது 3ம் பிரதிவாதி பெயரில் இருப்பதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். 3ம் பிரதிவாதி பெயரில் தான் மின் இணைப்பு இருந்தது என்பதனை நிருபிக்க ஆவணம் ஏதும் எங்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. 3ம் பிரதிவாதி பயன்படுத்திய மின் ஒயரால் தான் விபத்து ஏற்பட்டதாக நான் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். 3ம் பிரதிவாதி சுரேஷ் தான் மின் இணைப்பை பயன்படுத்தினார் என்பதை காட்ட ஆவணம் ஏதும் தாக்கல் செய்துள்ளோமா என்றால் இல்லை. பயன்படுத்தியதற்கான ஆதாரத்தை அழித்து விட்டார்கள். அவ்வாறு ஆதாரத்தை அழித்து விட்டதாக எங்களுடைய எதிர் வழக்குரையிலோ, எனது நிருபண வாக்குமூலத்திலோ சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. தமிழ்நாடு மின்சார வாரியம் வழங்கிய மின்சாரம் மூலமாகத்தான் இந்த விபத்து நடந்தது என்றால் சரிதான். 3ம் பிரதிவாதி யாருடைய வீட்டில் வாடகைக்கு இருந்தார் என்பதை நிருபண வாக்குமூலத்திலோ, எதிர் வழக்குரையிலோ சொல்லப்பட்டுள்ளதா என்றால் நிருபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன். மின் இணைப்பை வாடகைக்கு விட முடியுமா என்றால் முடியாது. மேற்படி காவேரி என்ற நபரை எங்கள் அலுவலகத்தின் சார்பாக விபத்து சம்மந்தமாக விசாரித்தோமா என்றால் இல்லை. காவேரிக்கு சொந்தமான மின் இணைப்பை பயன்படுத்தியது தவறு என்ற விவரம் எப்போது தெரிய வந்தது என்றால் விபத்திற்கு பிறகு தெரியவந்தது. மின் இணைப்பு தவறாக பயன்படுத்தியது குறித்து காவேரி மீதோ, சுரேஷ் மீதோ எங்கள் நிர்வாகத்தின் மூலம் நடவடிக்கை ஏதும் எடுக்கப்பட்டதா என்றால் இல்லை. மின்சாரத்தை திருடியதாகவோ அல்லது நீட்டித்ததாகவோ சொல்வது குறித்து நடவடிக்கை ஏதும் எடுக்கப்பட்டதா என்றால் இல்லை. மின் இணைப்பானது காவேரி என்பவருக்கு சொந்தமான இடத்தில் தான் உள்ளது என்பதை நிருபிக்க ஆவணம் தாக்கல் செய்துள்ளோமா என்றால் இல்லை. விபத்து நடந்த இடத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை. மின் விபத்திற்கு 3ம் பிரதிவாதி தான் காரணம் என சொல்லி காவல்

நிலையத்தில் புகார் ஏதும் எங்கள் தரப்பில் கொடுக்கப்பட்டதா என்றால் இல்லை. மின் விபத்து சம்மந்தமாக எந்த ஒரு குற்ற வழக்கும் 3ம் பிரதிவாதி மேல் கிடையாது என்றால் சரிதான். நான் எனது எதிர் வழக்குரை மற்றும் நிருபண வாக்குமூலத்தில் சொல்லியது போல 3ம் பிரதிவாதி சம்பவ இடத்தில் எந்த ஒரு தொழிலும் செய்யவில்லை என்றும், காவேரிக்கு சொந்தமான இடத்தில் வாடகைக்கு எடுத்து தொழில் செய்யவேயில்லை என்றால் சரியல்ல. மின் விபத்திற்கும், வழக்கிற்கும், 3ம் பிரதிவாதிக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. மின் விபத்து எங்களுடைய அஜாக்கிரதையால் ஏற்பட்டதால் வாதிக்கு நாங்கள் தான் இழப்பீடு கொடுக்க வேண்டும் என்றும், 3ம் பிரதிவாதி மீது நாங்கள் பொருப்பை சுமத்த முடியாது என்றால் சரியல்ல.

**4ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை** - மேற்படி 3ம் பிரதிவாதியின் குறுக்கு விசாரணை அப்படியே ஏற்றுக் கொள்ளப்படுகிறது.

/உண்மை நகல்/

ஒப்பம்/- திரு. ப. மதுசூதனன்,
முதன்மை மாவட்ட நீதிபதி,
திருவண்ணாமலை.